இனிமையான குழந்தைகளே! எப்போது சுத்தமான இளம் செடிகளில் (சிறு குழந்தைகளின் மீது) 5 விகாரங்கள் என்ற அசுத்தம் படிந்து விடுகிறதோ அப்போது தரக் குறைவு அதிகரிக்கிறது, இப்போது நீங்கள் மேன்மையானவர்களாக ஆக வேண்டும் மற்றும் ஆக்க வேண்டும்.

கேள்வி: சிரேஷ்டம் (மேன்மையானவர்) ஆவதற்காக ஸ்ரீ ஸ்ரீ சிவபாபாவிடமிருந்து எந்த சிரேஷ்ட (மிகச் சிறந்த) வழி கிடைக்கிறது?

பதில்: மேன்மையானவர்களாவதற்கு தந்தையின் ஸ்ரீமத் என்னவெனில் - குழந்தைகளே! குறைந்த திலும் குறைந்தது 8 மணி நேரம் எனது சேவையில் இருங்கள். 8 மணி நேரம் அந்த அரசாங்கத்தின் சேவை செய்யுங்கள், ஆனால் 8 மணி நேரம் என்னை நினைவு செய்யுங்கள் அல்லது சுயதரிசன சக்கரத்தைச் சுற்றுங்கள். கூடவே சங்கொ- எழுப்பி அனைவருக்கும் கூறுங்கள் - இல்லறத்தில் இருந்தாலும் தாமரை மலர் போன்று இருந்து தந்தையிடமிருந்து ஆஸ்தி அடையுங்கள்.

பாடல்: இந்த அனைத்து விளையாட்டுக்களையும் படைத்தது யார்..

ஓம்சாந்தி. இனிமையிலும் இனிய குழந்தைகள் பாட்டு கேட்டீர்கள். குழந்தைகள் முத-ல் அதிகமாக சத்யுகத்தின் சுகத்தை அனுபவித்தீர்கள், சுகத்தில் மிகவும் திளைத் திருந்தனர். குஷியோ குஷி தான். பாரதம் மட்டுமே இருந்தது, வேறு எந்த கண்டமும் இல்லை. பாரதவாசிகள் இராஜா, இராணியைப் போன்று பிரஜைகள் அனைவரும் கூட மிகுந்த சுகத்தில் திளைத்திருந்தனர், குஷியுடன் இருந்தனர். ஒருபோதும் எந்த தரக் குறைவான காரியம் நிகழவில்லை. சத்யுகத்தில் தேவி, தேவதைகள் மேன்மையானவர்களாக இருந்தனர், அவர்களுக்கு எவ்வளவு மகிமைகள் பாடப்படுகிறது! இராஜா, இராணியைப் போன்று பிரஜைகள் அனைவருக்கும் மகிமைகள் இருக்கும். பிறகு மாயை வந்து உடைத்து விடுகிறது. இதுவும் நாடகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது, இதை நல்ல முறையில் புரிந்து கொள்ள வேண்டும். தந்தையைத் தவிர வேறு யாரும் புரிய வைக்க முடியாது. தந்தை தான் பாரதம் மற்றும் உலகை சதா சுகமானதாக, அமைதியானதாக ஆக்கு கின்றார், அனைத் தையும் செய்து விட்டு பிறகு சுயம் மறைந்து விடுகின்றார். இது யாருடைய மகிமை? பரம்பிதா பரமாத்மாவினுடையது. பாரதம் எப்போது சொர்க்கமாக இருந்ததோ அப்போது தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்தது, சதோ பிரதானமாக இருந்தனர், துக்கத்தின் பெயர் அடையாளமின்றி இருந்தது. அரை கல்பத்திற்குப் பிறகு இராவண இராஜ்யம் ஏற்பட்டது. சத்யுகத் தின் தேவி தேவதைகளுக்கு சம்பூர்ண நிர்விகாரி, மரியாதா புருஷோத்தம் என்று மகிமை பாடப் படுகிறது. அங்கு ஒருபோதும் தரக் குறைவு ஏற்படவே முடியாது. அங்கு உயர்வானவர்கள் இருந்தனர். சுத்தமாக இருந்த குழந்தைகள் மீது 5 விகாரங்கள் என்ற அசுத்தம் பட்டதும் தரத்தில் குறைந்து விடுகிறது இப்போது முழுமையாக தரம் தாழ்ந்ததாக ஆகிவிட்டது. மேன்மையானவர் களாக இருந்த இராஜா, இராணி மற்றும் பிரஜைகள் அனைவரும் இப்போது தரம் தாழ்ந்தவர்களாக ஆகிவிட்டனர். எனக்குள் எந்த குணங் களும் இல்லை என்று பாடவும் செய்கின்றனர். நீங்களே கருணை காட்டுங்கள், ஓ இறை தந்தையே! என்று கருணை கேட்கின்றனர். தேவி தேவதைகளின் முன் சென்று நம்மை இவ்வாறு ஆக்குங்கள் என்று கூறுகின்றனர். இவ்வாறு நாம் மீண்டும் எப்போது ஆவோம்?

என்ற நாடகத்தின் ஞானம் அவர்களுக்குத் தெரியாது. நீங்கள் உயர்வானவர் களாக இருந்தீர்கள். தாழ்வானவர்கள் என்பதன் பெயர் இல்லாமல் இருந்தது. இந்த நேரத்தில் அனைத்து மனிதர்களும் தரம் குறைந்தவர்களாகிவிட்டனர். இராஜா, இராணியைப் போன்று பிரஜைகள், இப்போது தரம் தாழ்ந்ததி-ருந்து உயர்தரமானவர்களாக ஆவது எப்படி? என்பது யாருக்கும் தெரியாது. இதுவோ தூய்மையற்ற உலகம். தரம் தாழ்ந்தே தீர வேண்டும். எது வெல்லாம் புரிந்திருக்கிறீர்களோ அதை மற்றவர்களுக்கும் புரிய வையுங்கள் என்ற தந்தை கூறுகின்றார்.

எல்லாம் (நன்மைகள்) செய்து விட்டு நீங்கள் சுயம் மறைந்து விடுகிறீர்கள் என்று தந்தையின் மகிமை பாடுகிறீர்கள். நிராகார பகவான் அவசியம் வர வேண்டியிருக்கிறது. சிவஜெயந்தி கொண்டாடுகின்றனர். எப்படி வருகின்றார்? என்பதை இப்போது குழந்தை களாகிய நீங்கள் அறிவீர்கள். சிவன் பதீத பாவன், எப்போது இந்த முழு உலகமும் தூய்மை இல்லாமல் ஆகிவிடு கிறதோ அப்போது தான் அவர் வர வேண்டியிருக்கிறது. அவர் வந்து தூய்மையாக ஆக்க வேண்டும். இரண்டு, நான்கு பேரை மட்டுமே தூய்மை ஆக்கமாட்டார் அல்லவா! இராஜா, இராணியைப் போன்று பிரஜைகள் தூய்மையாக இருந்தனர், பிறகு இப்போது இராஜா, இராணியைப் போன்று பிரஜைகள் தூய்மையின்றி இருக்கின்றனர். இப்போது இராஜா, இராணி கிடையாது. இராஜாக்கள் இருந்தனர் என்பதை அறிவீர்கள், இப்போது அவர்களது இராஜ்யம் கிடையாது. ஆங்கிலேய அரசாங்கம் இருந்த பொழுது செல்வந்தர்கள், ஜமீன்தாரர்கள் போன்றவர்கள் செல்வம் கொடுத்தனர். யாராவது 20 - 30 ஆயிரம் கொடுக்கின்றனர் எனில் பட்டம் கிடைத்து விடும். பாபா அனுபவி அல்லவா! சிவபாபாவும் அனுபவி ரதத்தை தான் எடுத்திருக்கின்றார். அனுபவமற்ற ரதத்தை எடுக்க மாட்டார். பெரிய பெரிய இராஜாக்கள் இருந்த பொழுது அவர்கள் மிகவும் முதல் தரமான குதிரையை வைத்திருந்தனர். மிருகங்களிலும் சில மிக நல்லவைகளாக இருக்கின்றன. சில ஒட்டகங்கள் மிகவும் நல்லதாக இருக்கும். அதன் மீது அமரும் போது விமானத்தில் அமர்ந்தது போன்று இருக்கும். சிலவற்றிற்கு அதிக தண்டனை கொடுக்க வேண்டி யிருக்கும். ஆக இந்த பாரதம் 5 ஆயிரம் ஆண்டிற்கு முன்பு சொர்க்கமாக இருந்தது. அது மிகவும் பிரபலமானது. கிறிஸ்துவிற்கு 3 ஆண்டிற்கு முன்பு சொர்க்கம் இருந்ததாக கிறிஸ்தவர்களும் கூறுகின்றனர். இதன்படி கல்பமானது ஐயாயிரம் ஆண்டுகள் என்று ஆகிவிடுகிறது. சுயம் கல்பத்தின் ஆயுள் கூறுகின்றனர், பிறகு சத்யுகத்திற்கு லட்சம் ஆண்டு கள் என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட கருத்துக்களை பாபா புரிய வைக்கின்றார், இதை தாரணை செய்து மற்றவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும், ஆனால் புரிய வைப்பது கிடையாது.

நாம் உயர்வானவர்களாக இருந்தோம் என்பதை இப்போது குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். இராஜா, இராணியைப் போன்ற பிரஜைகள் உயர்வானவர்களாக இருந்தனர். சிங்கமும், ஆடும் ஒன்றாக தண்ணீர் குடித்தன. அங்கு கம்சன், ஜராசந்தன், இரண்யன் போன்ற எவரும் இல்லை. இரண்யனை சத்யுகத்திற்கும், கிருஷ்ணரை துவாபரத்திற்கும் கொண்டு சென்று விட்டனர். இராவணனை திரேதாவில் கொண்டு செல்கின்றனர். அனைத்து அசுரர்களுக்கும் தனித்தனியான பெயர்கள் கொடுத்து விட்டனர். கும்பகர்ணன் என்பதும் அசுரன் பெயராகும். இப்போது அசுர வம்சமாகும் அதாவது அசுத்த வழிப்படி நடக்கக்

கூடியவர்கள். இப்போது தந்தை வந்து ஸ்ரீமத் கொடுக்கின்றார். கிருஷ்ணருக்கான விசயம் கிடையாது. இப்போது நீங்கள் பிராமணர்களாக இருக்கிறீர்கள், பிறகு நீங்கள் தேவதைகளாக ஆகிறீர்கள். பரம்பிதா பரமாத்மா பிரம்மாவின் கமல வாயின் மூலம் பிராமணன், தேவதை மற்றும் சத்ரிய தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றார். வேறு எந்த தர்மமும் அங்கு இருக்காது. சத்யுகம், திரேதாவில் வேறு எந்த தர்மமும் ஸ்தாபனை ஆகவில்லை. இரண்டு யுகங்களின் ஆயுளும் ஒன்று போல 1250 ஆண்டுகளாகும். சத்யுகத்தில் தெய்வீக இராஜ்யம், திரேதாவில் சத்ரிய இராஜ்யம்...... சூரியவம்சம் மற்றும் சந்திரவம்சம். இந்த சூரியவம்சம் மற்றும் சந்திரவம்ச இராஜ்யத்தை யார் ஸ்தாபனை செய்தது? சந்திரவம்ச இராஜ்யத்தை இராமர் ஸ்தாபனை செய்தார், சூரியவம்ச இராஜ்யத்தை லெட்சுமி-நாராயணன் ஸ்தாபனை செய்தனர் என்று கூறலாமா? கிடையாது. இரண்டையும் ஸ்தாபனை செய்யக் கூடியவர் பரம்பிதா பரமாத்மா ஆவார். சொர்க்கத்தை படைப்பவர் தந்தை. சத்யுகம், திரேதாவின் இராஜ்யத்தை உருவாக் கினார். பரம்பிதா பரமாத்மா பிரம்மாவின் வாயின் மூலம் பிராமணன், தேவதா மற்றும் சத்ரிய தர்மத்தை படைத்தார் என்றும் பாடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு என்ன ஞானம் கூறுகிறேனோ அது பிறகு மறைந்து போய்விடும் என்று தந்தை கூறுகின்றார். இஸ்லாமியம், பௌத்தம் போன்று எந்த தர்மத்தை ஸ்தாபனை செய்து விட்டு சென்றார்களோ அவர்களது பெயர், உருவம், தேசம், காலம் போன்றவைகளை மறக்கமாட்டார்கள். அதை அனைவரும் அறிவீர்கள் அல்லவா! இந்த தேவதா தர்மத்தை நான் எப்படி ஸ்தாபனை செய்கிறேன்? என்ற ஞானத்தை அனைவரும் மறந்து வடுவீர்கள். பிறகு துவாபரத்தில் எவ்வளவு தர்மங்கள் ஸ்தாபனை ஆகிவிடுகிறது? ஒரே ஒரு இஸ்லாமியம், பௌத்த தர்மத்தில் நூற்றுக் கணக்கானவர் கள் ஆகிவிட்டனர். தங்களுக்குள் எவ்வளவு சண்டையிட்டுக் கொள்கின்றனர்! பாபா எவ்வாறு அனைத்தையும் செய்து விட்டு தன்னை மறைத்துக் கொள்கின்றார் என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். சொர்க்கத்தி-ருந்த தேவி தேவதைகளை மாயை வந்து கஷ்டப்படுத்தி விட்டது. முழுவதும் குணமற்றவர்களாக ஆகிவிட்டனர். எனக்குள் எந்த குணங்களும் கிடையாது என்று பாடுகின்றனர் அல்லவா! அதனால் தான் குணங்களுடைய தேவதைகளை பூஜிக்கின்றனர். பெரிய பெரிய இராஜாக்களின் அரண்மனைகளில் கோயில் இருக்கும். பூஜை செய்வர். கோயில் இல்லாத இராஜா யாரும் இருக்க முடியாது.

சிவபாபாவின் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும் என்பதை இப்போது குழந்தைகள் அறிவீர்கள். ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படியே நடந்து கொள்ள வேண்டும், அப்போது தான் தேவி தேவதையாக ஆவீர்கள். ஆனால் ஸ்ரீமத்படி நடப்பது கிடையாது. ஏதாவது ஒரு விசயத்தில் குழப்பம் ஏற்பட்டால் கடிதம் எழுதி கேளுங்கள் என்று பாபா கூறுகின்றார். தந்தையை நினைவு செய்யுங்கள். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடிய பரம்பிதா பரமாத்மாவை நினைவு செய்ய விடாத அளவிற்கு மாயை இருக்கிறது. புயல்கள் அதிகம் வரும் என்பதை பாபா அறிவார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்வது? என்று கடிதம் எழுதி கேட்க வேண்டும். குழந்தையின் திருமணம் இருக்கிறது - இந்த சூழ்நிலையில் என்ன செய்வது? யாராவது இறந்து விட்டால் என்ன செய்வது? வழி பெற வேண்டும். உயர்வானவர்களாக வேண்டுமெனில் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். கிருஷ்ணரின் வழி இருக்கவே முடியாது. கிருஷ்ணர் தூய்மை இல்லாத உலகிற்கு எப்படி வர முடியும்? கிருஷ்ணரின் ஆத்மா கடைசிப்

பிறவியில் சுயம் இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறது. கிருஷ்ணரின் ஆத்மா மட்டும் தானா? யாரெல்லாம் தேவி தேவதா பூமியைச் சார்ந்தவர்களோ அவர்கள் பிராமணர்களாக ஆகியிருக் கின்றனர். ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். எவ்வளவு முடியுமோ தந்தையை நினைவு செய்து கொண்டே இருங்கள் என்று தந்தை கூறுகின்றார். உங்களது பாவச் சுமைகள் அதிகம் இருக்கின்றன. சிலர் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கலாம். எட்டு மணி நேரம் அரசாங்க உத்தியோகம், பாக்கி என்ன நேரம் இருக்கிறதோ அதில் நினைவு செய்யுங்கள். குறைந்ததிலும் குறைந்தது 8 மணி நேரம் நீங்கள் எனது சேவை செய்யுங்கள், தந்தையை நினைவு செய்யுங்கள், சுயதரிசன சக்கரம் சுற்றுங்கள், சங்கு ஊதுங்கள். எந்த சங்கு? இல்லறத்தில் இருந்தாலும் தாமரை மலர் போன்று இருந்து தந்தையிடமிருந்து ஆஸ்தி எடுத்துக் கொள்ளுங்கள் என்று அனைவருக்கும் கூறுங்கள். தந்தை சொர்க்கம் படைக்கின்றார் எனில் சொர்க்கத்தின் ஆஸ்தி பெற வேண்டும் அல்லவா! பாரதம் தான் சொர்க்கத்திற்கு எஜமானாக ஆகிறது. இப்போது நரகத்திற்கு எஜமானாக இருக்கிறது. நரகத்தில் துக்கம் இருப்பதால் தான் தந்தையை நினைவு செய்கின்றனர், ஆனால் தந்தை என்ன கொடுப்பார்? என்பதை அறியவில்லை. தந்தையை சர்வவியாபி என்று கூறிவிட்டனர், கல், முள்ளில் இருக்கின்றார். நீங்கள் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டீர்கள்? என்ற தந்தை கூறுகின்றார். ஆனால் இதுவும் நாடகத்தில் பதிவாகியிருக்கிறது. இப்போது இதி-ருந்து வெளியேற்றுங்கள். இந்த பக்தி செய்து செய்து நீங்கள் களைப்படைந்து விட்டீர்கள். இப்போது பக்தியும் கலப்படமாக ஆகிவிட்டது. மரணம் எதிரில் வந்து நிற்கிறது. ஆக ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். ஆனால் குழந்தைகள் இப்படிப்பட்ட தந்தையை மறந்து விடுகின்றனர். மாயை, இராவணின் இராஜ்யம் எப்படி நடைபெறுகிறது? என்பதையும் யாரும் அறியவில்லை. இராவணனின் பொம்மையை எரிக்கின்றனர். இந்த வழக்கம் பிற்காலத்தில் உருவாகியது. இராவணனை எரிக்கின்றனர், ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இராவணன் பெரியதாகிக் கொண்டே செல்கிறது. முன்பு 10 அடியில் உருவாக்கினர், பிறகு 15 அடி உருவாக்கினர், பிறகு 50 அடி .. ஒரேயடியாக மாடி அளவிற்கு உருவாக்குகின்றனர். புத்தருக்கும் மிகப் பெரிய சிலை உருவாக்கு கின்றனர். இவ்வளவு பெரிய மனிதன் இருக்கவேமாட்டார்கள். அதிகபட்சம் 6 அடி இருப்பர். லெட்சுமி- நாராயணனும் இவ்வளவு தான் இருப்பர். அங்கு ஆயுள் அதிகமாக இருப்பதால் உயரமாக இருப்பார்கள் என்பது கிடையாது. மனிதன் மனிதன் தான். இப்போது வித விதமாக பார்க்கிறீர்கள். சிலர் கருப்பாக, சிலர் வேறு விதமாக இருக்கின்றனர். பாரதத்தில் அழகாகவும் இருந்தனர், இப்போது கருப்பாக ஆகிவிட்டனர். அழகானவர்களாக ஆக்கக் கூடியவர் பாபா. அவர் அழகான வழிப்போக்கன் ஆவார். அவர் உங்களுடன் உரையாடிக் கொண்டி ருக்கின்றார். அவரை மறக்கக் கூடாது. இவரை (சாகாரமானவர்) வேண்டுமென்றால் மறந்து விடுங்கள். நாயகிகளாகிய நம்மை பாபா மிக அழகான பாரிஜாதமாக ஆக்குகின்றார் என்று எப்போதும் நினையுங்கள். ஒரு ஏரியிருக்கிறது, அதில் மூழ்கி எழுந்தால் மனிதர்கள் பரியாக (தேவதை) ஆகிவிடுவர் என்று கூறு கின்றனர் அல்லவா! ஞானக் கடல் மூலம் ஞான பரியாக ஆகிவிடுவோம் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். இப்போது நரகத்தின் பரிகளாக இருக்கிறீர்கள் அல்லவா! எவ்வளவு தான் சிலர் (நாகரீக அலங்காரம்) செய்தாலும், பவுடர் போன்றவைகளை போட்டுக் கொண்டாலும் இருப்பது நரகத்தில் தானே! இது நரகமா? சொர்க்கமா? என்று யாரிடத்தில்

வேண்டுமென்றாலும் கேளுங்கள். செல்வந்தர்களுக்காக சொர்க்கம் என்று கூறுவர். சொர்க்கம், நரகத்தைப் பற்றியும் அறியவில்லை. ஆக ஸ்ரீமத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீமத்தை அறியவே யில்லை. யார் இந்த அளவிற்கு சிரேஷ்டமாக ஆக்கினாரோ அவரது பெயர், உருவத்தை மறைத்து விட்டனர். நீங்கள் தாய், தந்தை, நாங்கள் உங்களது குழந்தைகள் என்று பாடு கின்றனர். தாய் என்று யாரைக் கூறுகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவசியம் தந்தை யார் மூலம் பிரவேசம் செய்து படைப்புகளை படைக்கின்றாரோ அவரை தாய் என்ற கூறுவோம். நாம் பிரஜாபிதா பிரம்மாவின் வாய்வழி வம்சத்தினர்கள் என்பதை இங்கு நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். சிவபாபாவின் பேரன், பேத்திகள். ஆக தந்தைக்கும் பெயர் இருக்கிறது, இடையில் தந்தைக்கு புரோகிதர் அவசியம் தேவை. பேரன், பேத்திகள் என்று கூறிக் கொள்ளும் நீங்கள் தாத்தாவிடமிருந்து ஆஸ்தி எடுத்துக் கொள்ளுங்கள். ஆக இவர் (பிரம்மா) புரோகிதர் ஆவார், இவரிடமிருந்து ஆஸ்தி பெற முடியாது. இவரும் ஆஸ்தி சிவபாபாவிடமிருந்து தான் அடைய வேண்டும். சிவபாபாவின் வழிப்படி நடக்க வேண்டும். உங்களுக்கு பிரம்மாவின் மூலம் சிவபாபாவின் ஆஸ்தி கிடைக்கிறது. ஆனால் நீங்கள் இவரையும் மறந்து விடுங்கள் என்று பாபா கூறுகின்றார். சிவபாபாவிடமிருந்து நீங்கள் வழி பெற வேண்டும். சிவஜெயந்தி கொண்டாடுகின்றனர், ஆனால் முற்றிலுமாக அறிந்து கொள்ளவில்லை. சொர்க்கத்தை உருவாக்கும் தந்தையின் நினைவுச் சின்னத்தை மறைத்து விட்டனர். நரகத்தை உருவாக்குபவரின் நினைவுச் சின்னத்தை வைத்து விட்டனர். நாளுக்கு நாள் தரக்குறைவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. யாருக்காவது கோபம் வருகிறது எனில் புரிந்து கொள்ள வேண்டும் என்னிடத்தில் இந்த பூதம் இருக்கிறது, பிறகு நான் என்னை உயர்வானவர் என்று எப்படி கூறிக் கொள்ள முடியும்? நீங்கள் உயர்வானவர்களாக ஆவதற்கான முயற்சி அவசியம் செய்ய வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமாக குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நன்ஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தந்தையின் நினைவு மற்றும் ஞானக் கட-ன் ஞானத்தின் நினைவின் மூலம் அழகான ஞான பரியாக ஆக வேண்டும். அவசியம் ஒவ்வொரு அடியிலும் சிவபாபாவிடமிருந்து வழி பெற வேண்டும்.

2) உயர்வானவர்களாக ஆவதற்காக உள்ளுக்குள் இருக்கும் பூதங்களை நீக்கி விட வேண்டும். பிரேஷ்டம் ஆக்கக் கூடிய எந்த காரியமும் செய்யக் கூடாது.

வரதானம் : பிரச்சனை என்ற மலையை பறக்கும் கலையின் மூலம் விநாடியில் கடந்து செல்லக் கூடிய எளிய முயற்சியாளர் ஆகுக.

இமயமலை போன்று எவ்வளவு பெரிய பிரச்சனைகளையும் கடந்து செல்வதற்கு பறக்கும் கலையை தன்னுடையதாக ஆக்கிக் கொள்ளுங்கள். சதா தன் எதிரில் அனைத்து பிராப்திகளையும் வையுங்கள் மற்றும் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருங்கள். பிறகு பிரச்சனை என்ற மலையை விநாடியில் கடந்து விடுவீர்கள்.

நிகழ்காலம் மற்றும் எதிர்கால பிராப்திகளை மட்டும் அனுபவம் செய்தால் போதும். ஸ்தூல கண்களினால் ஸ்தூல பொருட்களை தெளிவாக தென்படுவது போன்று புத்தியின் அனுபவக் கண்களின் மூலம் பிராப்திகள் தெளிவாக தென்பட வேண்டும். ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு வருமானம் சேமித்துக் கொண்டே இருங்கள்.

சுலோகன்: அனைவருக்கும் மரியாதை கொடுப்பவர்கள் தான் உதாரண மூர்த்தி ஆகின்றனர்.